# தமிழ்நாடு தலைகுனியாது அறிக்கை

கார்த்திகேய சிவசேனாதிபதி
செயலாளர், சுற்றுச்சூழல் அணி.



| தேதி | இடம் |
|---|---|
| 11.02.26 | பரமத்திவேலூர் |
| 12.02.26 | குமாரபாளையம் |
| 16.02.26 | ஈரோடு மேற்கு |
| 17.02.26 | மொடக்குறிச்சி |
| 18.02.26 | பெருந்துறை |
| 20.02.26 | திருப்பூர் வடக்கு |
| 21.02.26 | கோவை வடக்கு |
| 23.02.26 | பொள்ளாச்சி |
| 24.02.26 | மடத்துக்குளம் |
| 25.02.26 | தொண்டாமுத்தூர் |
| 26.02.26 | ஒட்டன்சத்திரம் |

# பரமத்திவேலூர் (நாமக்கல் மேற்கு) தொகுதி

'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற முழக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் M.K. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, பரமத்திவேலூர் (நாமக்கல் மேற்கு) தொகுதிக்கான கருத்துக் கேட்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினேன்.

பரமத்தி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. P.P. தனராசு அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பரமத்தி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. V.N. லலித்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் Dr. M. மதிவேந்தன் அவர்கள், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) திரு. K.S. மூர்த்தி அவர்கள் மற்றும் பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் திருமதி S. உமாராணி ஆகியோர் முன்னிலையில், தொகுதியின் வளர்ச்சி மற்றும் வருங்காலத் தேவைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினோம்.

இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள், மக்கள் நலச்சங்க நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பல்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தங்கள் மேலான கருத்துகளைப் பதிவு செய்தனர்.

நன்றியுரை ஆற்றிய ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் திரு. ரங்கசாமி (எ) சத்தியராஜ் அவர்களுக்கும், இந்நிகழ்வில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கிய கழகச் சார்பு அணி பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றிகள்.

குறிப்பாக, இக்கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த தொழில் முனைவோர்கள், பொதுமக்கள் மற்றும் எந்நாளும் களத்தில் நிற்கும் கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


தமிழ்நாடு
தலைகுனியாது!


தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு
தலைகுனியாது


# நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி

"தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்" என்ற முழக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் M.K. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் விளக்கப் பொதுக்கூட்டங்கள் மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளிபாளையம் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினேன்.

பள்ளிபாளையம் நகர கழகச் செயலாளர் திரு. அ.குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நகர அவைத்தலைவர் திரு. H. குலாப்ஜான் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் Dr. M. மதிவேந்தன் அவர்கள், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் திரு. கே.எஸ். மூர்த்தி (B.Sc., Ex.MLA) அவர்கள், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. K.E. பிரகாஷ் (MP) அவர்கள் மற்றும் மாநில விவசய அணி துணைச் செயலாளர் திரு. வெப்பாடை G. செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில், தொகுதியின் வளர்ச்சி மற்றும் வருங்காலத் தேவைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினோம்.

இந்நிகழ்வில் சமூக ஆர்வலர்கள், தொழிலதிபர்கள், மக்கள் நலச்சங்க நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பல்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தங்கள் மேலான கருத்துகளைப் பதிவு செய்தனர்.

நன்றியுரை ஆற்றிய நகர துணைச் செயலாளர் திரு. P. சண்முகம் அவர்களுக்கும், இந்நிகழ்வில் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கிய மாவட்ட, நகர மற்றும் சார்பு அணி பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றிகள்.

குறிப்பாக, இக்கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்த தொழில் முனைவோர்கள், பொதுமக்கள் மற்றும் எந்நாளும் களத்தில் நிற்கும் கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


தமிழ்நாடு
தலைகுனியாது!
ராகம் PPM


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு
தலைகுனியாது!
சிறப்புரை: உயர்திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள்
மாநில சுற்றுச்சூழல் அணி செயலாளர்
நாள்: 12.02.2026
வியாழக்கிழமை
இடம்: கருணா மஹால்,
புதன்சந்தை, பள்ளிபாளையம்.



# ஈரோடு தெற்கு மாவட்டம், ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி

'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற முழக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் M.K. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மற்றும் பரப்புரை பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, ஈரோடு தெற்கு மாவட்டம், ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட EPB நகர் திடலில் 16.02.2026 அன்று மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பால்வளத் தந்தை (சினியம்பாளையம்) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. S.K. பரமசிவம், மற்றும் கர்மவீரர் காமராஜர் ஆகியோருடைய திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி M.A., அவர்களின் சீரிய வழிகாட்டுதலிலும், சிறப்பான ஏற்பாட்டிலும் இந்த நிகழ்வு மிக நேர்த்தியாகவும் பிரம்மாண்டமாகவும் நடைபெற்றது, அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரப்புரைப் பயணத்தின் போது, மகளிர் அணியின் மாவட்டப் பொறுப்பாளர் அன்புச் சகோதரி அனிச்சம் கனிமொழி அவர்களின் இல்லத்தில் மதிய உணவருந்தினோம். அப்போது கழகத்தின் மூத்த முன்னோடிகளின் தியாகங்கள் மற்றும் பணிகள் குறித்து உரையாடியது ஒரு நெகிழ்ச்சியான மற்றும் இனிய வேளையாக அமைந்தது.

ஈரோடு மாநகரக் கழகச் செயலாளர் திரு. மு. சுப்பிரமணியம் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கிய இக்கூட்டத்தில், மாநிலச் சுற்றுப்புறச் சூழல் அணிச் செயலாளராகிய நானும், தலைமைக் கழகப் பேச்சாளர் கவிஞர் ஈரோடு இளையகோபால் அவர்களும் சிறப்புரையாற்றினோம். கழகத் துணைப் பொதுச் செயலாளர் திரு. அந்தியூர் ப. செல்வராஜ் MP, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் திரு. கே.இ. பிரகாஷ் MP, கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர் திரு. வி.சி. சந்திரகுமார் MLA, ணக்கத்திற்குரிய ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. நாகரத்தினம் சுப்பிரமணியம் மற்றும் ஈரோடு மேற்கு தொகுதி பார்வையாளர் திருமதி. மீனா ஜெயக்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வின் நிறைவாக, வணக்கத்திற்குரிய ஈரோடு மாநகராட்சி துணை மேயரும், பெரியசேமூர் பகுதி கழகச் செயலாளருமான திரு. வி. செல்வராஜ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் 12-வது வார்டு செயலாளர் திரு. ப. வினோத் குமார் MBA.,LLB., உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு தலைகுனியாது!

# ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி

'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற முழக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் M.K. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் 17.02.2026 அன்று "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது.

நமது மண்ணின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் போராடிய மாபெரும் தியாகிகளான க.ர. நல்லசிவம் (Ex-MLA), கே.பி. சுந்தராம்பாள், கொடிகாத்த திருப்பூர் குமரன், மாவீரன் பொல்லான், மாவீரன் தீரன் சின்னமலை மற்றும் மு. சின்னசாமி (Ex-MLA) ஆகியோரின் நினைவிடங்களுக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினோம்.

முள்ளாம்பரப்பு பகுதியில் நடைபெற்ற பிரம்மாண்டமான பரப்புரை பொதுக்கூட்டத்திற்கு மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வை ஒரு மக்கள் திருவிழாவைப் போல மிக நேர்த்தியாகவும், பிரம்மாண்டமாகவும் ஒருங்கிணைத்து வழிநடத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில் ஆற்றிய எனது உரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கடந்த 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியின் சாதனைகளையும், சாமானிய மக்களுக்கான திராவிட மாடல் அரசின் திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்தேன். குறிப்பாக, இந்த நிகழ்வில் ஆண்களை விடப் பெண்கள் மிக அதிக அளவில் பங்கேற்று கழகத்தின் மீது தங்களுக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தியது பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திரு. அந்தியூர் ப. செல்வராஜ், M.P., கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் திரு. கே.இ. பிரகாஷ், M.P., மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளர் திரு. வி.சி. சந்திரகுமார், MLA மற்றும் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் திரு. LPF தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். எழுச்சியுடன் வரவேற்புரை வழங்கிய மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியச் செயலாளர் திரு. சு. குணசேகரன் அவர்களுக்கும், நன்றியுரை ஆற்றிய திரு. K.T. பெரியசாமி அவர்களுக்கும், மற்றும் கலந்துகொண்ட அனைத்து மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது நன்றிகள்!


ஸ்டாலின் தொடரட்டும்...
ஜாடிக்கு ஏற்ற
மூடி போல,
மோடிக்கு ஏற்ற
அடிமையாக




தமிழ்நாடு
தலைகுனியாது!

# திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, மாநிலம் முழுவதும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக, திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலை மற்றும் மடத்துக்குளம் பகுதிகளில் பல்வேறு மக்கள் நல நிகழ்வுகள் மற்றும் ஆலோசனைக் கூட்டங்கள் எழுச்சியுடன் நடைபெற்றன.

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினருமான உயர்திரு. கே. ஈஸ்வரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பயணத்தில், உடுமலை மத்திய ஒன்றியப் பொறுப்பாளர் திரு. க. செந்தில்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பயணத்தின் தொடக்கமாக, நமது மண்ணின் மதிப்பிற்குரிய தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

தொடர்ந்து, மலைப்பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்களை நேரில் சந்தித்து அவர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள் மற்றும் தேவைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தோம். மேலும், சமூகத்தின் அடிதட்டு மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியதுடன், அவர்களுடன் இணைந்து சமபந்தி விருந்தில் பங்கேற்று உரையாடியது நெகிழ்ச்சியான மற்றும் மனநிறைவான தருணமாக அமைந்தது.

தொகுதி வளர்ச்சி மற்றும் வருங்காலத் தேவைகள் குறித்து தொழில் முனைவோர் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினேன். இந்த முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தில் என்னுடன் சுற்றுச்சூழ்நிலை அணியின் மாநிலத் துணைச் செயலாளர் திரு. நாராயணமூர்த்தி மற்றும் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கரும்புக்கடை திரு. சாதிக் ஆகியோர் உடனிருந்து சிறப்பித்தனர். திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததுடன், தொகுதியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் விவாதித்தோம்.

இப்பயணத்தின் மற்றொரு சிறப்பம்சமாக, கழகத்தின் தூண்களாக விளங்கும் மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லங்களுக்குச் சென்று சந்தித்து நலம் விசாரித்து மரியாதை செலுத்தினோம். இந்நிகழ்வின் நிறைவாக, உடுமலை ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் திரு. T. முருகானந்தம் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் எனப் பெருந்திரளானோர் பங்கேற்று இக்கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தினர்.


ஸ்டாலின் தொடரட்டும்...
சிறப்புரை.


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு தலைகுனியாது!



# கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக, கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொள்ளாச்சி வடக்கு மற்றும் மேற்கு ஒன்றியப் பகுதிகளில் 23.02.2026 அன்று பல்வேறு மக்கள் நல நிகழ்வுகள் மற்றும் எழுச்சிமிகு பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பயணத்தின் தொடக்கமாக, தேசப்பிதா மகாத்மா காந்தி மற்றும் உலகப்பொதுமறை தந்த ததிருவள்ளுவர் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். அதனைத் தொடர்ந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நமது மொழியைக் காக்க இன்னுயிரைத் தியாகம் செய்த தீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட அந்தத் தபால் நிலையப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்தோம்.

மேலும், கழகத்தின் அசைக்க முடியாத தூண்களாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள கழக மூத்த முன்னோடிகளை அவர்களது இல்லங்களுக்கு நேரில் சென்று சந்தித்து, நலம் விசாரித்து மரியாதை செலுத்தினோம். தொடர்ந்து நடைபெற்ற கருத்துக் கேட்புக் கூட்டத்தில், தொகுதி மேம்பாடு மற்றும் மக்களின் எதிர்காலத் தேவைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினோம்.

ஜலத்தூர் பிரிவு பகுதியில் நடைபெற்ற பிரம்மாண்டமான பரப்புரை பொதுக்கூட்டத்திற்கு, கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திரு. தளபதி முருகேசன் அவர்கள் தலைமை தாங்கினார். பொள்ளாச்சி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. கி. ரமேஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இக்கூட்டத்தில், கழக உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. K. ஈஸ்வரசாமி மற்றும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் திரு. தீப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாநிலச் சுற்றுப்புறச் சூழல் அணிச் செயலாளராகிய நான் சிறப்புரையாற்றிய இந்த நிகழ்வில், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் தலைமைக்கழகப் பேச்சாளர் திரு. கரும்புக்கடை சாதிக் மற்றும் கோவை தெற்கு மாவட்ட சுற்றுச்சூழ்நிலை அணித் துணை அமைப்பாளர் திரு. அவினாஷ் கார்த்திக் ஆகியோர் உடனிருந்து சிறப்பித்தனர். திராவிட மாடல் அரசின் ஈடு இணையற்ற சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்ததுடன், பொள்ளாச்சி மண்ணின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் விவாதித்தோம்.

நிகழ்வின் நிறைவாக, கோவை தெற்கு மாவட்டப் பிரதிநிதி திரு. வெ. சபரேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் எனப் பெருந்திரளானோர் பங்கேற்று இப்பயணத்தை வெற்றிகரமாக நடத்தினர்.


தமிழ்நாடு
தலைகுனியாது!
ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!
பொள்ளாச்சி வடக்கு (மே) ஒன்றியம்
தமிழ்நாடு
தலைகுனியாது!
ஸ்டாலின் தொடரட்டும்.. தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு
தலைகுனியாது!

# திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, மாநிலம் முழுவதும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக, திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், தொழில் அதிபர்கள், தொழில் முனைவோர், முக்கிய பிரமுகர்கள் மற்றும் விவசாயப் பெருமக்களுடனான சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது.

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சரும், திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான மாண்புமிகு அர. சக்கரபாணி B.A., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஒட்டன்சத்திரம் நகரக் கழகச் செயலாளரும் நகரமன்றத் துணைத் தலைவருமான திரு. ப. வெள்ளைச்சாமி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பார்வையாளரும் மாநில நெசவாளர் அணிச் செயலாளருமான திரு. பரணி K. மணி அவர்கள் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. காளியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களின் சிறப்பான ஏற்பாட்டிலும், எழுச்சியான வழிகாட்டுதலிலும் ஒரு மக்கள் திருவிழாவைப் போல இந்த நிகழ்வு மிக நேர்த்தியாகவும் பிரம்மாண்டமாகவும் நடைபெற்றது. ஒரு வெற்றிகரமான பரப்புரைப் பயணத்தை ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒருங்கிணைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பயணத்தின் மிக நெகிழ்ச்சியான தருணமாக, தங்கள் வாழ்நாளைக் கழகத்திற்காக அர்ப்பணித்து, நம் இயக்கத்தின் ரத்தமும் சதையுமாய் விளங்கும் மூத்த முன்னோடிகளை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து உரையாடினோம். அவர்களின் தியாகமும் உழைப்புமே இன்று நாம் காணும் திராவிட மாடல் ஆட்சியின் அசைக்க முடியாத அடித்தளம்.

இந்நிகழ்வின் நிறைவாக, கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. வெ. கண்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். மாவட்ட அவைத்தலைவர் திரு. தி. மோகன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் திரு. சி. இராஜாமணி, திரு. ந. சுந்தரராஜன், திருமதி. மு. தாமரைச்செல்வி மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு. க. விஜயன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் இக்கூட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்
தமிழ்நாடு
தலைகுனியாது!
ஆலோசனைக்கூட்டம்


தமிழ்நாடு
தலைகுனியாது!


24 X 7

# கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக, கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு மக்கள் நல நிகழ்வுகள் மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் திரு. தொண்டாமுத்தூர் ரவி அவர்களுடன் இணைந்து, இப்பயணத்தின் தொடக்கமாக சுகுணாபுரம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட கழக மூத்த முன்னோடி திரு. மாரப்பன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடல்நலம் குறித்து விசாரித்து மரியாதை செலுத்தினோம். கழகத்தின் அசைக்க முடியாத தூண்களாக விளங்கும் முன்னோடிகளின் ஆலோசனைகள் எப்போதும் நமக்கு வழிகாட்டியாகும்.

அதனைத் தொடர்ந்து, தாளியூர் பேரூராட்சி R.R.தோரணம் மஹாலில் தொண்டாமுத்தூர் தொகுதிக்குட்பட்ட தொழில் முனைவோர்கள், சமூக சேவகர்கள், கல்வியாளர்கள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்புக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாநிலச் சுற்றுப்புறச் சூழல் அணிச் செயலாளராகிய நான் கலந்துகொண்டு, தொகுதியின் வளர்ச்சி மற்றும் வருங்காலத் தேவைகள் குறித்து அவர்களின் மேலான கருத்துக்களைக் கேட்டறிந்தேன்.

மேலும், இப்பயணத்தின் ஒரு பகுதியாகக் கரும்புக்கடை பகுதி கழகத்தில் உள்ள ஜமாத் நிர்வாகிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடினோம். இந்நிகழ்வில் பகுதி கழகச் செயலாளர் திரு. ஜெய்லாப்தீன், வணக்கத்திற்குரிய துணை மேயர் திரு. வெற்றிச்செல்வன், மாவட்டப் பொருளாளர் திரு. அப்துல் ரகுமான் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

பயணத்தின் நிறைவாக, செல்வபுரம் பகுதி கழகத்தில் #தமிழ்நாடு_தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நானும், தலைமைக் கழகப் பேச்சாளர் திரு. சிவாஜி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டு, திராவிட மாடல் அரசின் ஈடு இணையற்ற சாதனைகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் விளக்கி சிறப்புரையாற்றினோம். இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.


தர்சினி
தமிழ்நாடு

# கோவை மாநகர் மாவட்டம், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக, கோவை மாநகர் மாவட்டம், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு மக்கள் நல நிகழ்வுகள் மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

பயணத்தின் தொடக்கமாக, வடவள்ளி பகுதி மாநகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள தேசத்தந்தை திரு. மகாத்மா காந்தி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். அதனைத் தொடர்ந்து, 38-வது வட்டக் கழக அலுவலகத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினேன். மேலும், கழகத்தின் அடித்தளமாக விளங்கும் மூத்த முன்னோடிகளை நேரில் சந்தித்து, அவர்களின் தியாகங்கள் மற்றும் பணிகள் குறித்து நெகிழ்ச்சியுடன் உரையாடினோம்.

சாய்பாபா காலனி J.K. ஹோட்டலில் நடைபெற்ற கருத்துக் கேட்புக் கலந்துரையாடல் கூட்டத்தில், சமூக ஆர்வலர்கள், குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்களைச் சந்தித்து, தொகுதியின் வளர்ச்சி மற்றும் மக்களின் தேவைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இந்நிகழ்வில், கோவை மாநகர் மாவட்டச் சுற்றுச்சூழல் அணியின் சார்பாகப் பங்கேற்றவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கியது மிகுந்த மனநிறைவைத் தந்தது.

கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் திரு. துரை செந்தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில், மாவட்டப் பொருளாளர் திரு. முருகன், மாநிலச் சுற்றுச்சூழல் அணித் துணைச் செயலாளர் திரு. மணி சுந்தர், மாநிலத் தொழில்நுட்ப அணித் துணைச் செயலாளர் திரு. தமிழ்மறை, மேற்கு மண்டலத் தலைவர் திருமதி. தெய்வயானை தமிழ்மறை, மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர் திருமதி. சரஸ்வதி மற்றும் வீரகேரளம் பகுதி கழகப் பொறுப்பாளர் திரு. பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், வட்டக் கழகச் செயலாளர்கள் திரு. கனகராஜ், திரு. சின்னசாமி, திருமதி. சின்னதங்கம், திருமதி. தெய்வம் மகாலட்சுமி, திரு. வேலுசாமி, திரு. விஸ்வநாதன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் திரு. மணி, திரு. கார்த்திக், திருமதி. சத்யா, திரு. சுரேஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் திரு. ராம்குமார், திரு. மதன், திரு. தேவதாஸ், திரு. சுரேஷ் குமார், பகுதி அணி நிர்வாகிகள், திரு. வக்கீல் சுந்தர்ராஜ், பாகநிலை முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு வெல்லட்டும்!
தமிழ்நாடு
தலைகுனியாது!


ஸ்டாலின் தொடரட்டும்... தமிழ்நாடு

# ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக, ஈரோடு மத்திய மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விஜயமங்கலம் மற்றும் மேற்கூர் பகுதிகளில் மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டம் மற்றும் கருத்துக் கேட்பு நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

முன்னாள் அமைச்சரும், ஈரோடு மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளருமான உயர்திரு. தோப்பு N.D. வெங்கடாச்சலம் B.A., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பெருந்துறை மேற்கு ஒன்றியப் பொறுப்பாளர் திரு. சோளி S. பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு சு. முத்துசாமி ] அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாநிலச் சுற்றுப்புறச் சூழல் அணிச் செயலாளராகிய நான் கலந்துகொண்டு, திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் தொகுதியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினேன்.

இந்த எழுச்சிப் பயணத்தில் என்னுடன் சுற்றுச்சூழல் அணியின் மாவட்டத் துணைப் பொறுப்பாளர் திரு. கவின், திரு. சென்னிமலை தங்கராசு, திரு. சென்னிமலை யுவராஜ் ஆகியோர் உடனிருந்து சிறப்பித்தனர். மேலும், இப்பயணத்தின் போது தொகுதியின் முக்கிய நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகளான திரு. பால் சின்னசாமி, திரு. C. பெரியசாமி, திரு. T.P. கனகராஜ், திரு. செ. சுப்பிரமணியம், திரு. V. ராஜா, திரு. ந. பிரபு, திரு. P.P. ஈஸ்வரமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினர்.

நிகழ்வின் நிறைவாக, பெருந்துறை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் திரு. ப. செல்வராஜ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பெருந்துறை தொகுதியின் வளர்ச்சிக்காகவும், கழகத்தின் வெற்றிக்காகவும் திரண்டிருந்த மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி

கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலம் முழுவதும் நடைபெற்று வரும் "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில் மக்கள் சந்திப்பு மற்றும் கருத்துக் கேட்பு நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன.

வணக்கத்திற்குரிய திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு. ந. தினேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்பயணத்தில், மாநிலச் சுற்றுப்புறச் சூழல் அணிச் செயலாளராகிய நான் கலந்துகொண்டு சிறப்பித்தேன். பயணத்தின் மிக முக்கிய நிகழ்வாக, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழகத்தின் மூத்த முன்னோடிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களைச் சந்தித்து நலம் விசாரித்தோம். கழகத்தின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்த அவர்களின் தியாகங்களைப் போற்றி உரையாடியது நெகிழ்ச்சியான தருணமாக அமைந்தது.

அதனைத் தொடர்ந்து, திருப்பூர் பகுதியில் உள்ள முக்கியப் பிரமுகர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களைச் சந்தித்து, கடந்த நான்கு ஆண்டுகளில் நமது திராவிட மாடல் அரசு செய்துள்ள மகத்தான சாதனைகளையும், செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களையும் விரிவாக எடுத்துரைத்தோம். மேலும், தொகுதியின் வளர்ச்சித் தேவைகள் குறித்த அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டறிந்தோம்.

இந்த நிகழ்வுகளில் சுற்றுச்சூழ்நிலை அணியின் மாநிலத் துணைச் செயலாளர் திரு. நாராயணமூர்த்தி, மாவட்ட, மாநில மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






ஸ்டாலின் தொடரட்டும்.. தமிழ்நாடு வெல்லட்டும்!

ஸ்டாலின் தொடரட்டும்!
தமிழ்நாடு வெல்லட்டும்!